8 ஜனவரி 2010

## சபைகளில் நெருப்பு-வெடிகுண்டு குறித்த என்இசிஎப் மலேசியாவின் அறிக்கை

தேசிய சுவிஷேச கிறிஸ்தவ ஐக்கியம் (NECF) மலேசியா கடந்த 24 மணி நேரங்களில் சபைகளுக்கு நேரிட்ட சம்பவங்களை குறித்து கவலை கொண்டிருக்கிறது. சபை ஸ்தலங்களில் சில பொறுப்பற்ற தீவிரவாதிகள் நெருப்பு வெடிகுண்டுகளை வீசியதிற்காக வருந்துகிறோம். இச்செயல்கள் பல்லின சமூதாயத்தின் மத்தியில், அவர்களுடைய முதிர்ச்சியின்மை, மற்றவர்களோடு சகிப்புத்தன்மையற்ற குணநலன்களை காட்டுகிறது.

இன்று வரை சேதங்களை குறித்து அறிக்கை வெளியிடப்படவில்லை, காவல் மற்றும் தீயணைப்பு துறையினரை தீவிரமாக செயலாற்ற ஆலோசனை கூறுகிறோம். அது புலன் விசாரனையை தீவிரப்படுத்தி, சம்பந்தப்பட்டவர்களை நீதிக்கு முன்பாக கொண்டு வரும் என்பதை நம்புகிறோம்.

சரியான புரிந்துணர்வு இல்லாதவர்கள் மற்றும் சீக்கிரத்தில் குழப்பமடைபவர்களுக்கு விழிப்புணர்ச்சி மற்றும் முதிர்ச்சியடைந்த சிந்தைனையை ஏற்படுத்த, ஏற்ற நடவடிக்கைகளை வளரும் ஜனநாயக சமூதாயத்தில் அமல்படுத்த அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறோம்.

பிரதமரின் 1 மலேசியா திட்டத்தில் இம்மாதிரியான பொறுப்பற்ற செயல்கள், அதன் நோக்கத்திற்கு பாதகத்தை விளைவித்து, பொருளாதார மந்தத்திலிருந்து விடுபட எடுக்கப்படும் நாட்டின் முயற்சிகளும் சரிவை காணும் என்பதில் வருத்தமடைகிறோம்.

கிறிஸ்தவர்களாக, நாட்டின் பொறுப்புள்ள குடிமக்களாக, இந்த தேசத்தில் எல்லா பகுதிகளிலும் சமாதானத்தையும், அமைதியையும் காண விரும்புகிறோம். ஆகவே, நாங்கள் செயல்முறை பகுத்தறிவை செயல்படுத்தவும், நியாயத்திற்கு எழும்பும் குரலை கேட்கவும், எல்லா இனம் மற்றும் மதங்களின் சமூதாய குழுவினர்களின் ஒற்றுமை மற்றும் அமைதியை கடைபிடிக்க, அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்படிக்கு, எல்லா சமூதாயத்தினரையும் கேட்டுக் கொள்கிறோம்.

எல்லா அரசியல் கட்சிகளும் அனைவருடைய அடிப்படை சட்டம் மற்றும் மனித உரிமைகளை மதித்து, தனிநபருடைய நம்பிக்கை மற்றும் மத சுதந்திரத்தை முன்னிட்டு, மற்ற மதங்களின் கோட்பாடுகளில், வசனங்களில் தலையிடாமல் இருக்க வேண்டும் என்று என்இசிஎப் கேட்டுக் கொள்கிறது.

எல்லா கிறிஸ்தவர்களையும் தேசத்தின் சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்காகவும் ஜெபிக்கும்படிக்கு என்இசிஎப் மேலும் கேட்டுக் கொள்கிறது.

வெளியிட்டவர்:
என்இசிஎப் மலேசியா தலைவர்